மீறப்பட்டால் உரிமம் முழுவதும் ரத்து செய்யப்படுவதற்கோ அல்லது தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதற்கோ உட்பட்டதாகும்.

(9) உரிமதாரர், முந்தைய மாதத்தில் காட்டப்பட்ட திரைப்படங்களின் பட்டியலை வைத்து வரவேண்டும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேபிள் டி.வி., சன் டி.வி., போன்ற டி.வி. நிகழ்ச்சிகளில் வெஸ்டர்ன் ஸ்டைலில் நடனங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இளைஞர்கள் நம்முடைய டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்காமல் இந்த சன்.டி.வி, கேபிள் டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நம்முடைய கலாச்சாரத்தையே மாற்றி விடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் இதை காலையிலும் மாலையிலுமாவது மாற்றுவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்வி கேபிள் டி.வி.யில் படங்கள் காட்டுவதற்கு உரிமங்கள் வழங்கப்படுமா என்பது பற்றி. எனவே அதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். அவர் கேட்ட கேள்வி பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : இங்கே கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் இத்தனை எண்ணிக்கை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் எவ்வளவு பணம் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமம் வழங்கப்பட்ட மனுக்கள் 435. உரிமம் வழங்கப்பட்டதன் மூலம் 4 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் உரிமக்கட்டணமாக வசூலிக்கப்பட்டது என்பதையும் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 156, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

156—

சேரன்மகாதேவி தொகுதியில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.

*** 12861**—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர், கல்லிடைக்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பாடநூல் கமிட்டி உதவியுடன் புதியதாக கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியில் மிகப்பெரிய பேரூராட்சிகளான வீரவநல்லூர், கல்லிடைக்குறிச்சி பகுதிகளில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் ஏராளமான மாணவர்கள் பயிலுகிறார்கள். ஆனால் அவர்கள் நல்ல கட்டிடங்களிலிருந்து பயிலுகிற வசதியில்லாத நிலையில், கழிப்பிடங்கள் அருகிலும், மரத்தின் நிழலிலும் இருந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் தேவை கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பாடநூல் கழகத்தின் உதவியுடன் அதற்கு நிரந்தரமாக ஒரு கட்டிடம் கட்டித் தருவார்களா, அதைப் பரிவுடன் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லிடைக்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்ட 7-1-1987-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. நிலம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால், 20-1-1992-ல்தான் கட்டிடம் முடிக்கப்பட்டு, தலைமையாசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேலும் கட்டிடம் தேவையெனில், உரிய முன்மொழிவு பெறப்பட்டால் தமிழ்நாடு பாடநூல் கழகம் நிதி அளிக்க முன்வந்தால், முன்னுரிமை அடிப்படையில் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வீரவநல்லூர் பள்ளிக்கு கட்டிடம் தொடர்பான முன்மொழிவு பெறப்பட்டாலும் முன்னுரிமை அடிப்படையில் அரசு பரிசீலிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு பள்ளிகளும் அதிக மாணவர்களைக் கொண்ட பள்ளிகளாகும். அங்கே இரண்டு வகுப்பறைகளுக்கு அனுமதியளித்திருக்கிறோம் என்று சொன்னார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். ஆனால் அந்த இரண்டு வகுப்பறைகளையாவது உடனடியாக அந்த இரண்டு பள்ளிகளிலும் கட்டித்தர பாடநூல் கழகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டாயப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1994 ஜனவரி 4]

மாண்புமிகு பேராசிரியர் சு. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 20-1-1992-ல் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப் போல, பாட நூல் கழகத்தை அப்படிக் கட்டித்தர கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் அரசு நிதியிலிருந்து அந்தக் கட்டிடம் கட்ட நிதி தேவையென்று அவர்கள் கேட்பார்களேயானால், அரசு ஒதுக்கும் நிதியிலிருந்து பள்ளிக் கட்டிடம் தேவை என்ற முன்மொழிவை அனுப்புவார்களேயானால், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக ரூ. 1,12,500 செலுத்துவதாகத் தீர்மானம் இயற்றி, அந்த தீர்மானத்துடன் இத்தகைய முன்மொழிவு அனுப்பப்பட்டால், நிதிநிலைக்கேறப அரசு ரூ. 1,12,500 கொடுப்பது குறித்து முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 157, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், இருக்கையில் இல்லை.

வினா எண் 158, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

158 —

சிவகெங்கை நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக உயர்த்துதல்.

* ***11064*** - *திரு. கே. ஆர். முருகானந்தம்:*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகெங்கை நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகெங்கை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தினுடைய தலைநகராக இருக்கிறது. இன்றையதினம் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி ஆட்சியில் அரசு அலுவலகங்கள், அரசுக் குடியிருப்புகள் எல்லாம் அதிகமாக விரிவடைந்து, மக்கள் தொகையும் அதிகமாகி இருக்கிறது. நகரம் வளர்ச்சியடைந்திருக்கிறது. நகரத்தின் எல்லையும் கூட கூடியிருக்கிறது. நகராட்சியின் வருமானமும் அதிகமாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், அதை முதல்நிலை